**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 115/2013</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 15.07.2025**

**பெயர் – வாசு (எ) வாசுதேவன்**

**த/பெ – வேனுகோபால்**

**சாட்சி – DW2**

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.00 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

1. சாட்சியிடம் வா.சா.ஆ 1 காண்பிக்கப்பட்டது. தாவா சொத்து சம்பந்தமான சர்வே எண் 320, 321 இதில் வீட்டு மனை எண் 80/10 என்று உள்ளது என்றால் சரிதான். இதில் உள்ள மனை எண் 80/10 தற்போது 3 மற்றும் 4 – ஆம் வாதிகளுக்கு சொந்தமான வீட்டு மனை என்றால் சரியல்ல. இந்த ஆவணம் 2002 ல் பதிவு செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது இந்த ஆவணம் 3 ம் பிரதிவாதியான ரூபாவதி பெயரில் சட்டப்படி பதிவு செய்ப்பட்டது என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தில் சரியான முத்திரை தீர்வை கட்டி திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. அந்த ஆவணத்தின் மேற்கு பக்கம் 30 அடி ரோடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இந்த ஆவணம் குறித்து எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ 3 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. 3 ம் வாதி நிர்மலாவின் பெயரில் முறையான முத்திரைக் கட்டணம் செலுத்தி திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் இந்த ஆவணம் குறித்தும் எனக்கு தெரியாது. எனது பிரமான வாக்குமூலத்தில் 14 ம் பத்தியில் வாதியின் பெயரில் புகார் செய்து சி.எஸ்.ஆர் பெற்றுள்ளதாக கூறியுள்ளேன், அதை இந்நீதிமனற்த்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் புகார் கொடுக்காமல் வாதிகளை மணலி புது நகர் காவல் ஆய்வாளரை வைத்து மிரட்டினேன் என்றால் சரியல்ல. 14.06.2013 ல் காவல் ஆய்வாளர் வாதிகளை மிரட்டியதால் வா.சா.ஆ 4 வழக்கறிஞர் அறிவிப்பு காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது என்றால் தெரியாது.

3. வா.சா.ஆ 5 வாதிகள் தரப்பில் இருந்து டி.ஜி.பிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் தெரியாது. வா.சா.ஆ 6 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது முதலாம் வாதியின் பெயரில் வீட்டு வரி ரசீது கட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. விச்சூர் ஊராட்சியால் சீல் போடப்பட்டது என்றால் தெரியாது. வாதிகள் முறையாக அரசாங்கத்தில் வரி செலுத்தி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால்

சரியல்ல. வா.சா.ஆ 7 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது அந்த ஆவணம் குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ 7ல் வீட்டு வரி ரசீது என்று விச்சூர் ஊராட்சியால் சீல் போடப்பட்டது என்றால் தெரியாது.

4. வாதிகள் வீடு கட்டி குடியிருக்கவில்லை என்றால் வீட்டு வரி ரசீதுகள் கொடுக்கப்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது 3ம் வாதி தமிழ்நாடு மின்வாரியத்தில் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது என்றால் தெரியாது. நான் அரசாங்கத்தால் முறையாக மின் கட்டணம் செலுத்திய ரசீதை தெரியாது என்று கூறுவதால் நான் சட்டவிரோதமாக வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்தை சட்டவிரோதமான அபகரிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ 9 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது 1 மற்றும் 2 வாதிகள் முறையான கட்டணம் செலுத்தி திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது. இந்த ஆவணத்தின் சொத்து விவரத்தில் சர்வே எண் 320, 321 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இதில் மனை எண் 89/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த ஆவணம் வாதிகளின் வழக்குரையில் ஐடம் 1 சம்பந்தமான சொத்து என்றால் தெரியாது. இந்த ஆவணத்தின் கிழக்கு பக்கம் 30 அடி ரோடு உள்ளது என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த ஆவணத்தின் கிழக்கு பக்கம் 30 அடி ரோடு உள்ளது வாதிகள் கோரும் நிவாரணம் பி அட்டவணையில் உள்ள ரோடு என்றால் தெரியாது.

6. வா.சா.ஆ 11 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. இதில் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் உள்ள 30 அடி ரோடு உள்ள என்றால் அது எங்கள் இடத்திற்கு செல்வதகற்கான ரோடு. அதில் காண்பிக்கப்படும் ரோடில் வாதிகள் வீடு உள்ளது என்றால் அந்த இடத்தில் இல்லை. இந்த ரோட்டில் வாதிகள் வீடு தவிர மேலும் வேறு நபர்களின் வீடுகள் உள்ளது என்றால் எங்கள் இடத்திற்கு இடது பக்கம் வேறு வீடுகள் உள்ளது. மேற்சொன்ன 30 அடி ஸ்ரீனிவாச நகர், 3ம் தெரு ரோடு பாதையை மறித்தால் வேறு வழி ஏதேனும் உள்ளதா என்றால் வேறு வழி உள்ளது, 2-வது தெரு வழியாகவும் வரலாம்.

7. ஸ்ரீனிவாச நகர், 3ம் தெருவில் உள்ள வாதிகளின் வீட்டிற்கு 2-வது தெரு வழியாக செல்ல முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 12 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. இதில் 2ம் வாதி நிர்மலாவின் பெயரில் பட்டா தாக்கல் ஆகிய உள்ளது என்றால் தெரியாது. வாதிகளுக்கு சொத்தில் உள்ள உரிமையை காண்பிக்க வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 14 வரையிலான ஆவணங்கள் வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணங்கள் எதுவும் முறையானவை அல்ல. அனைத்து ஆவணங்களும் சட்டப்படியான ஆவணங்கள் என்று நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 03.45 பி.எம்.**